

'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில், வாக்குச்சாவடிதோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினர்களாக்கும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை தொடர்ந்து தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 13வது வார்டில் வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில இளைஞர் அணி இன்பா ரகு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், துணை அமைப்பாளர் அருண் சுந்தர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தை தமிழ்நாடு முழுவதும் கழக உடன்பிறப்புகள் அனைத்து இல்லங்களுக்கும் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள், எதிர்கொள்ளும் உரிமைப் போராட்டங்கள் பற்றி மக்களிடம் எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையை நடத்தி வருகின்றனர்! அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட பரமக்குடி வடக்கு நகரம் தர்மராஜபுரம் வார்டு எண் 2 பூத் எண்102 ல் உள்ள இல்லங்களில் நேரடியாக சென்று உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார். தென்மண்டல தேர்தல் பொறுப்பாளரும் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தமிழ்நாட்டின் மண்மொழிமானம் காக்க தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சாதி மதம் கடந்து ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இந்நிகழ்வில் செ.முருகேசன் மற்றும் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், சேது கருணாநிதி, ஜீவரத்தினம் மற்றும் வாசுதேவன், கதிரவன், குணசேகரன், சக்தி, அண்ணாமலை, மற்றும் மாநில மாவட்ட நகர கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரை மற்றும் கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியினை சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி முன்னிலையில் மண்டல பொறுப்பாளர் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ.. முன்னாள் எம்.எல்.ஏ நகர மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், ஓரணியில் தமிழ்நாடு தொகுதி ஒருங்கிணைப்பாளர் வினோத், பாலா,மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மற்றும் மானாமதுரை நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## நெல்லை கிழக்கு மாவட்டத்தில் – 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கைத் திட்டம்!

# கனிமொழி கருணாநிதி எம்.பி. வீடு வீடாகச் சென்று துவக்கி வைத்தார்!

## மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில்!

பாளையங்கோட்டை, ஜூலை 5-

தமிழகம் முழுவதும் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி "ஓரணியில் தமிழ்நாடு" என்ற திட்டத்தின் கீழ் தி.மு.க.விற்கு தீவிர உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. அதன்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட பாளையங்கோட்டை வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய செயலாளர் கண்ணன் ஏற்பாட்டில் பாளையஞ்செட்டிகுளம் பகுதியில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில கழக துணை பொதுச்செயலாளரும்,கழக நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று வீடு,வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு சென்ற இடங்களில் எல்லாம் பெண்கள் உற்சாகமான வரவேற்பளித்தனர்.

முன்னதாக கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பேசியதாவது.

முதலமைச்சராக அண்ணன் தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று கொண்ட போது ஒன்றிய அரசு எத்தனையே பிரசரசனைகளை உருவாக்கி தொந்தரவு செய்து வந்தது.அதனை எதிர்கொண்டு சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள்.முதலமைச்சர் அவர்கள் பலமுறை ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய நிதியை கேட்டும் கொடுக்க வில்லை.நமது குழந்தைகள் கல்விக்கு 2000 கோடி நிதி கொடுக்க வேண்டும் அதனையும் தர மறுக்கிறார்கள்.இந்தி படித்தால் 2000 கோடி நிதி தருவோம் என்கிறது ஒன்றிய அரசு,ஆனால் 10 ஆயிரம் கோடி தந்தாலும் வேண்டாம்.இந்தி படிக்க மாட்டோம் என தமிழர்களின் சுயமரியாதையை காத்தவர் நமது முதலமைச்சர் அவர்கள்.

தமிழக அரசு விடியல் பயணம், இல்லந்தேடி கல்வி,மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் உரிமைகளை பறித்தாலும் தமிழக மக்களை பாதுகாப்பேன் என்று கூறி சிறப்பான ஆட்சியை நம் முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்கள். மொழி, நமது சரித்திரம்,உரிமைகள்,கல்வி வேலைவாய்ப்பு கிடைத்திட தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும். நல்லாட்சி தொடர வேண்டும்,தமிழக மக்களுக்காக குரல் கொடுத்து வரும் ஒரே கட்சி தி.மு.க.மட்டும் தான்.

அ.தி.மு.க. பா.ஜ.க. வுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என தொடர்ந்து கூறிவந்தார்கள் ஆனால் பா.ஜ.க. மிரட்டியவுடன் பயந்துவிட்டார்கள். கூட்டணி வைத்துள்ளார்கள் இதனை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்,"ஓரணியில் தமிழ்நாடு" என்ற உறுப்பினர் சேர்க்கையில் இணைந்து அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்.தமிழ்நாடு ஒருமித்த கருத்தோடு உறுதியாக உள்ளது. என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசினார்கள்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல்,நாங்குநேரி தொகுதி பார்வையாளர் முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,ஞான திரவியம்,மாவட்ட பொருளாளர் ஜார்ஜ்கோசல்,ஒன்றிய செயலாளர் போர்வெல்கணேசன்,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி ஜான் ரபீந்தர்,வழக்கறிஞரணி செல்வ சூடாமணி,தகவல் தொழில் நுட்ப அணி பிரேம் ஆனந்த், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கொள்கைமகன் வாழ்க!



அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
" அன்பகத்தை" வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் "தளபதி"யின்
கொள்கைமகன் வாழ்க!

செல்லமே, தந்தை உள்ளமே,
அன்பு வெள்ளமே நீ வாழ்க!
சிங்கமே, கலை அங்கமே,
ஒளிர் தங்கமே! நீ வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு களத்தில்நிற்கும்
வீரன்இவன் வாழ்க!
" திருக்குவளைச் சோழனுக்குப்"
பேரன்இவன் வாழ்க!

தென்னனே, இளம் மன்னனே,
எழில் வண்ணனே! நீ வாழ்க!
செங்கதிர் நிகர் செல்வனே,
மனக் கள்வனே! நீ வாழ்க!

இரக்கத்தின் அருள்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் கனவுகளில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
"சேப்பாக்கம் தொகுதி"செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

கன்னலே, குளிர் திங்களே,
நறுந் தென்றலே! நீ வாழ்க!
கைசிவந் திடும் வள்ளலே,
உயர் செம்மலே! நீ வாழ்க!

முன்னேற்றக் கழகத்தின்
இளையநதி வாழ்க!
பொன்னேட்டு வரலாற்றின்
புதியவிதி வாழ்க!
தென்னாட்டுப் போர்ப்படையின்
இதயநிதி வாழ்க!
திராவிடத்தின் விடியல்!எங்கள்
உதயநிதி வாழ்க!

அந்தமே இலாச் சொந்தமே,
உயிர்ப் பந்தமே! நீ வாழ்க!
"அண்ணனும் பெரி யாருமே"
இரு கண்எனும் நீ வாழ்க!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
" அன்பகத்தை" வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் "தளபதி"யின்
கொள்கைமகன் வாழ்க!

**(ஜூலை 4 கழக இளைஞரணிச் செயலாளராக, துணை முதல்வர், மதிப்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்)**



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி
### ஜூலை 5 (2000)



**சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.**

**இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு "மாநில சிறந்த கூட்டுறவாளர்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பார்வதி நாராயணசாமி
### ஜூலை 5 (2023)



**தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.**

**வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தில் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**